மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய சங்கம் அமைப்பது அவசியம் என்று துணை இயக்குநர் பரிந்துரை செய்து அனுப்பினால் அரசு ஆய்வு செய்து முடிவு எடுக்கும்.

சாத்தூர் வட்டத்தில் தொழிலியல் நெசவுக் கூடங்கள்.

713—(*வினா எண். 7864) **திரு. வி. பாலகிருஷ்ணன் :** மாண்புமிகு ஆயத் தீர்வை, கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசித் தொகுதி, தா. ராமலிங்காபுரம், வி. துரைச் சாமிபுரம் என்ற விஜயரெங்கபுரம் கிராமங்களில் கட்டப்படும் தொழிலியல் நெசவுக் கூடங்களின் மொத்த மதிப்பீடு எவ்வளவு?

(ஆ) எப்பொழுது வேலை முடிக்கப்படும்?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) காமராஜர் மாவட்டம், சாத்தூர் வட்டம், இராமலிங்காபுரத்திலும் மற்றும் வி. துரைச்சாமிபுரத்திலும் கட்டப்பட்டு வரும் தொழிலியல் நெசவுக் கூடங்கள் முறையே ரூபாய் 6 இலட்சத்து 37 ஆயிரம் மதிப்பீட்டிலும் 12 இலட்சத்து 74 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலும் கட்டப்பட்டு வருகிறது.

(ஆ) (1) தா. இராமலிங்கபுரத்திலுள்ள அறிஞர் அண்ணா தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் தொழில் கூட கட்டுமானப் பணி கூரை மட்டம் வரை முடிக்கப்பட்டு, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் பெறப்பட வேண்டிய ரூ. 2.80 இலட்சம் பெறப்படாமையால் நிலுவையில் உள்ளது. இந்நிதியுதவி பெறப்பட்ட பின் இரண்டு அல்லது மூன்று திங்களில் முடிக்கப்பட்டு விடும்.

(2) வி. துரைசாமிபுரத்திலுள்ள சௌடாம்பிகை தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் தொழில்கூட கட்டுமானப் பணி கூரை மட்டம் வரை முடிக்கப்பட்டுள்ளது. இச்சங்கத்திற்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்திலிருந்து ரூ. 2.80 இலட்சம் வழங்கப்படுமானால் இச்சங்க கட்டுமானப் பணி 30—6—1986-க்குள் முடிவு பெற்று விடும்.

1986 மே 8]

திரு வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இரண்டு சங்கங்கள் மூலமாகக் கட்டப்படுகிற கூடங்களின் வேலைகள் தாமதமாக நடைபெறுகின்றன. அவை உடனடியாக நடைபெறுவதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, கூடியவிரைவில் கட்டி முடிக்க விரைவான நடவடிக்கை எடுக்கப்படும்.

கோ-ஆப்டெக்ஸ் நிறுவன இரவு காவலர்கள்.

714—(* வினா எண். 9053) திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு ஆயத் தீர்வை, கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனங்களில் பணிபுரியும் இரவு காவலர்கள் மற்றும் அலுவலக ஊழியர்களின் சம்பள விகிதத்தை மாற்றியமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு வி. வி. சுவாமிநாதன் : இல்லை.

திரு. சைதை. சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்றியமைக்கின்ற செயற்குறிப்பு இல்லை என்று சொன்னார்கள். ஆனால் மத்திய குடோனில், கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தில் பணிபுரியும் இரவு காவலர்களுடைய சம்பள விகிதம் 350 ரூபாயிலிருந்து குறைக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறு குறைக்கப்பட்ட அந்தச் சம்பள விகிதத்தை மாற்றி அதிகரிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா? ஐந்தாண்டு, ஏழாண்டுக் காலங்கள் அங்கே தற்காலிகமாகப் பணி புரிகிற தொழிலாளர்கள் நிரந்தரம் செய்யப்படுவார்களா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுத்த தகவலின் மீது அறிக்கை பெறப்பட்டு, இலாக்கா ஆய்வு செய்து அவசியமானால் நடவடிக்கை எடுக்கலாம்.